தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, தற்போது சமய நிறுவனங்களுக்கு வசூலாகவேண்டிய பாக்கிகளாக எவ்வளவு இருக்கின்றன என்று அரசுக்குத் தகவல் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அதுபற்றித் தகவல் இல்லை. தனிக்கேள்வி போடும்படியாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த மாதிரியான பொதுவான கேள்விகளுக்கு உபகேள்விகள் கேட்கும்போது, அது குறித்த சில விவரங்களை அமைச்சர்கள் வெளியிட்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால் ஒவ்வொன்றுக்கும் தனிக்கேள்வி போடுவதென்றால்......

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர்கள் பதில் சொல்லவில்லை என்றால் பதில் அவர்களுக்கு வரவில்லை அல்லது முழுமையாக பதில் அறியவில்லை என்று அர்த்தம். உள்ளபடியே தனிக்கேள்வி போட்டால் சரியான பதில் கிடைக்கும்.

(திரு. ஜி. சுவாமிநாதன் இருக்கையை விட்டு எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உடனே பதில் வேண்டும் என்று நீங்கள் வலியுறுத்துகிற மாதிரி இருந்தால் முடியாது. அப்படி உடனே பதில் வேண்டுமென்று கேட்டு அவர்களும் எதையாவது சொல்லவேண்டும் என்று எண்ணுகிறீர்களா ?

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. கவன ஈர்ப்பு

கல்வித் துறையின் 5-2-1968 நாளிட்ட 168-ஆம் எண் அரசாணை, பள்ளிக் கல்வி இயக்குநரின் 23-1-1975 நாளிட்ட நடவடிக்கைகள் காரணமாக மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு வேலை நீக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது குறித்து.

THIRU K. S. GANAPATHI : Hon Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the large scale issue of orders of termination of services of non-teaching staff of the Aided High Schools in the State who have completed four years of service and more as a result of the implementation of G.O. Ms. No. 168, Education, dated 5th February 1968 and the proceedings of the Director of School Education, dated 23rd January 1975 and the resultant hardship caused to hundreds of families in the State.

 கல்வித் துறையின் 5—2—1968 நாளிட்ட 168-ஆம் எண் அரசாணை பள்ளிக் கல்வி இயக்குநரின் 23—1—1975 நாளிட்ட நடவடிக்கைகள் காரணமாக மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரியரில்லாத பணியாளர்களுக்கு வேலை நீக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது குறித்து

[1975 மார்ச் 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசாணை எண் 168 கல்வி நாள் 5-2-1968-ன் கீழ் திருத்தி அமைக்கப்பட்ட தமிழ்நாடு கல்வி விதி 13-எண்படி உதவிபெறும் பள்ளிகளில் நியமனம் பெறும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் (எழுத்தர், நூலக எழுத்தர், பதிவு எழுத்தர், கடைநிலை ஊழியர் போன்றோர்) அரசுப் பணியில் அந்த அந்தப் பதவிகளுக்குத் தேவையான தகுதிகள் அனைத்தும் பெற்றிருக்கவேண்டும். பல உதவிபெறும் பள்ளிகள் மேற்கண்ட விதி கல்வித் தகுதிகளுக்கு மட்டுமே பொருந்துமெனக் கருதி 25 வயதுக்கு மேற்பட்டவர்களை பணியில் அமர்த்திவிட்டன. மேற்கண்ட கல்வித் தகுதியல்லாத வயது வரம்பு தகுதிகளுக்கும் பொருந்தும். எனவே 5-2-1968 லிருந்து மேற்கண்ட பதவிகளில் அதிக வயதுடையவர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தால் அந்த நியமனங்கள் நடைமுறையில் உள்ள விதிகளுக்குப் பொருந்தாது என பள்ளிக் கல்வி இயக்குநர் அரசு குறிப்பாணை எண் 33744/டி2/73-6 கல்வி நாள் 7-2-1974 ல் தெரிவிக்கப்பட்டார். இதை பள்ளிக் கல்வி இயக்குநர் 2-7-1974 தேதியில் கல்வித்துறை அலுவலகங்களுக்கு அனுப்பியுள்ளார். (23-1-1975 தேதியில் அல்ல). பள்ளிக் கல்வி இயக்குநர், வயது வரம்பு குறித்து குறிப்பாக ஏதும் விதியில் இல்லாததால் வயது வரம்பைக் கருதாது பல உதவிபெறும் பள்ளிகளில் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளனவென்றும் அதற்கு அரசு பின் ஏற்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டு அங்ஙனம் வழங்கப்படவில்லையெனில் அந்தப் பணியாளர்கள் அனைவரும் பணியினை இழந்து பெரும் அல்லலுக்குள்ளாவார்கள் என்றும் அரசுக்குத் தெரிவித்தார். அரசு, பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு 5-2-1968 அன்று 25 ஆண்டுகள் நிரம்பப்பெற்று, உதவிபெறும் பள்ளிகளில் 5-2-1968 முதல் 1973-74 கல்வி ஆண்டு முடிய ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு செய்யப்பட்ட நியமனங்கள் அனைத்துக்கும் அரசு ஆணை (நிலை) எண் 327 கல்வி நாள் 3-3-1975 ல் பின் ஏற்பு வழங்கியுள்ளது. எனவே கவன ஈர்ப்பில் குறிப்பிட்டுள்ள அல்லல்கள் எழா.

திரு கே. எஸ் சண்முகி: தலைவரவர்களே, இந்தப் புது ஆணை பிறப்பித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் சேலம், கோவில்பட்டி, திருநெல்வேலி ஆகிய கல்வி மாவட்டங்களிலே இந்த அரசாணையைக்கொண்டும், பள்ளிக் கல்வி இயக்குநருடைய நடவடிக்கைகளைக்கொண்டும் பல ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் வேலை நீக்கம், செய்யப்பட்ட அந்த ஊழியர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த ஆணையின்படி 5-2-1968 முதல் 1973-74 கல்வி ஆண்டுக்கு இடையிலே வயது வரம்புக்குட்பட்டிருந்தாலும்கூட அவர்களைச் சேர்த்துக

பள்ளிக் கல்வி இயக்குநரின் 23—1—1975 நாளிட்ட நடவடிக்கைகள் காரணமாக மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரியரில்லாத பணியாளர்களுக்கு வேலை நீக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது குறித்து

கொள்ளலாம் என்று இருக்கிறது. 3—3—1972-ம் ஆண்டு ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக நீக்கப்பட்டிருந்தால் மறுபடியும் சேர்த்துகொள்ள வழி ஏற்படும் என்று கருதுகிறேன். ஏதாவது சங்கடம் இருந்தால், மறு விளக்கங்கள் பெறலாம்.

திரு கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது என்று இருந்தாலும், உத்தரவு நடைமுறையிலே சென்றுவிட்ட காரணத்தாலே, அவர்கள் பணி வேலையிழந்திருக்கின்றார்கள். அவர்களுடைய பணிப் பாதுகாப்பு நியாயமானதுதான். எனவே அந்த அடிப்படையில் அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் கவனிக்கலாம். ஆனால் அதற்கிடையிலே வேறு யாரையாவது போட்டிருப்பார்களானால் அவர்களைக் கொண்டுவந்து வைத்து, பின் இவர்களை அனுப்ப வேண்டி வரும்.

3. தகவல் கோரல்.

மாநில முதலமைச்சர்கள் மகாநாட்டு முடிவுகள் குறித்து.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் மாநில முதலமைச்சர்கள் மகாநாடு டெல்லியிலே நடைபெற்றிருக்கிறது. அந்த மகாநாட்டின் முடிவுகள் இன்றைய தினம் பத்திரிகைகள் மூலமாகத் தெரியவருகின்றன. மகாநாட்டிலே கோதுமை, அரிசி சம்பந்தமான பல முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாநில அரசு அரிசியை தாய்லாந்து, பர்மாவிலே இருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தது. மத்திய அரசைப் பொறுத்த வரையிலே, கோதுமைதான் இறக்குமதி செய்யப்படும். இந்த அரிசி இறக்குமதி செய்யப்படாது என்று சொன்னதாக அந்தப் பத்திரிகைச் செய்திகள் மூலம் நான் அறிந்தேன். இந்த மகாநாட்டின் முடிவுகளைப் பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன். காரணம் இதற்கு முன்னாலேகூட ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி, இந்த அவையிலே விவாதம் நடந்து கொண்டிருந்த போது, ஒரு பிரச்சினையை எழுப்பியபோது, டெல்லி போய் வந்த முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி இங்கே ஒரு விளக்கம் தந்திருந்தார்கள். அது போன்று ஒரு நல்ல விளக்கத்தை இங்கே தந்தால நல்லது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.